# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2020** **நான்காம் வகுப்பு**

அனைவருக்கும் வணக்கம்

## விழிப்புணர்வு

அவுஸ்திரேலியாவில், அண்மையில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தால், எமது நாடு பல்லாயிரக்கணக்கான உயிரினங்களையும், மனித உயிர்களையும் இழந்தது மட்டுமல்லாது, குடிமக்கள் பலர், மீளப்பெற முடியாத உடைமைகளையும் இழந்துள்ளனர்.

ஆதியிலே கடவுள் உலகையும், உலகில் உள்ள அனைத்தையும் உருவாக்கினார். அவை அனைத்தும் நிறைவுள்ளதாக இருந்தன என அறிகிறோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் இயற்கை தன் வளத்தை மனிதர்களுக்கு தந்து கொண்டே இருக்கிறது.

“ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வழங்குன்றிக் கால்”

என்று மழையின் அவசியத்தை வள்ளுவர் விளக்குகிறார்.

தற்போது இயற்கை தன் வழங்களை இழக்கத் தொடங்கி விட்டது. இதற்கு சுனாமி, பூகம்பம், புயல், காட்டுத்தீ ஆகியன காரணங்கள் ஆகும். மனிதர்களின் ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப்புகளும் இயற்கையை மாசுபடுத்துகின்றன.

தனி மனித விழிப்புணர்வாலும், பாதுகாப்பான அறிவியல் தொழில் நுட்பத்தாலுமே இவ்வித மாசுபடுதலைப் பெருமளவு குறைக்க முடியும். எனவே, மாசுகளற்ற உலகத்தை உருவாக்க நாம் முயற்சி எடுப்போம்.

நன்றி
வணக்கம்